உ

இறைவன் றுணை

# குழந்தை இலக்கியம்

## பகுதி—I.

¤


ஆக்கியோர்:

வித்துவான், திரு. அடிகளாசிரியர்

தமிழ் விரிவுரையாளர்,

புலவர் கல்லூரி, கரந்தை, தஞ்சாவூர்.


¤


வெளியிடுவோன்:

அ. பேராசிரியன்

கரந்தை, தஞ்சாவூர்.

¤

அச்சிட்டோர்

மகாலிங்கம் அச்சகம், தஞ்சாவூர்.

# குழந்தையின் பாட்டோவியம்.

“ நீலமுந் தாமரையும்
நீரிலே பூத்திருக்கும்
கோலநிறத் பந்தரிலே
கொடிமுல்லை பூத்திருக்கும் ;
வாடாத ரோஜா
வடிவின் அழகாலே
கண்டார் மனத்தைக்
கவருங் குழந்தைக்கு
ஓடுங்கால் தாமரைப்பூ ;
உண்ணுங்கை தாமரைப்பூ ;
நாடுங்கண் நீலப்பூ ;
நல்லநகை முல்லைப்பூ ”

உ

இறைவன் றுணை

# "அணிந்துரை"

என் தந்தையார் வித்வான், திரு. அடிகளாசிரியரவர்கள் 'குழந்தை இலக்கியம்' என்ற தலைப்பில் எளிய இனிய பாட்டுக்கள் பலவற்றைப் பாடி வைத்துள்ளதைப் படித்துப் பார்த்தேன். இவைகளை அச்சிட்டுத் தமிழ்நாட்டுக் குழந்தைகட்குக் கொடுத்தால் நன்றாயிருக்குமே என்று நான் அப்பொழுது கருதினேன். இக்கருத்தை என் தந்தையாரிடங் கூறிய பொழுது, அவர்கள் இக்குழந்தை இலக்கியத்தை என் குழந்தையாகிய நீயே அச்சிட்டுத் தமிழ்நாட்டுக் குழந்தைகட்குக் கொடுத்தால் நன்றாயிருக்கும் என்று கூறினார்கள். அவர்கள் கூறியவண்ணமே இதனை அச்சிட்டுத் தமிழ்நாட்டுக் குழந்தை யுலகத்திற்குக் கொடுக்கின்றேன். இதனைப் படித்துச் சுவைத்துத் தங்கட்குத் தோன்றுங் கருத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டுகின்றேன். இவ்விலக்கியத்திலிருந்து பாட்டுக்களை எடுத்து அச்சிட யாராவது விரும்பினால் அவர்கள் எங்கள் ஆணைபெற்றே அச்சிட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குழந்தை இலக்கியத்தின் ஏனைய பகுதிகளையும் முடிந்தால் அச்சிடலாம் என்று கருதுகிறேன்.

இங்ஙனம்

அ—பேராசிரியன்

கரந்தை, தஞ்சாவூ.

உ

இறைவன் துணை

குழந்தையைக் குறித்த இலக்கியம் — 1.

# குழந்தை முருகன் — 1.

(தொண்டன் கூறுவது)

1 பொய்கை மலர்மேலே — அன்று
பூத்த முருகோனே! — உன்றன்
தெய்வ இளமையினை — எவர்
தீட்டிப் புகழ்ந்திடுவார்?

2 முல்லைக் குமுதமலர் — இள
மூரலும் வாய்களுமே — நல்ல
சொல்லை அருளுமலர் — அருட்
சோதி முகமலரே.

3 கண்ணுங் கருமணியும் — என்னைக்
காண இழுக்கும் மலர் — வல்ல
வண்ணத் திருக்கை மலர் — என்னை
வாவென்ற செம்மலரே.

4 துன்பந் துடைப்பதற்கே — நெஞ்சில்
தோன்றும் மலரிரண்டு — அவை
இன்பம் விளைக்கும் மலர் — என்னை
ஏற்கின்ற தாமரையே.

5 "தெய்வ மலர் நிறைந்த — ஒரு
தீந்தமிழ்ப் பூஞ்செடிபோல்" — புதுப்
பொய்கை மலர்மேலே — அன்று
பூத்த முருகோனே!

6 பாலுந் தயிருமுண்டு — உயர்
பட்டுடை தானணிந்த — குழக்
கோலச் சிறுவரிடம் — நீயும்
கூடி யிருந்திடினும்,

7 கூழும் பெருமையினல் — உளங்
குன்றி இரங்குகின்ற — இளம்
ஏழைச் சிறுவரிடம் — முருகா!
என்றும் இருப்பாயே.

8 ஏழைச் சிறுவரெலாம் — நாம்
ஏத்தும் இளமுருகன் — அவர்
வாழ உணவளித்தால் — முருகன்
வந்து மகிழ்ந்திடுமே.

9 கந்தையைப் போக்கியவர் — இடையில்
கட்ட உடையளிக்கில் — நந்தம்
சொந்த முருகனுக்கே — பட்டுச்
சோடி கொடுத்ததுவாம்.

10 ஏழைச் சிறுவருக்கே — கல்வி
ஏற்றம் அளித்திடிலோ — குருக்
கோழி முருகனுக்கே — உளத்தில்
கோடி மகிழ்ச்சிவரும்.

11 நாட்டின் குழந்தையெலாம் — நமக்கு
நல்ல முருகர்களாம் — அவர்
வாட்டம் உறுதபடி — என்றும்
வாழ்ந்திடச் செய்திடுவோம்.

---

# ஏழை மாணவர் — 2.

(தொண்டன் கூறுவது)

1 கந்தற் சட்டையும், கழித்திடு சுவடியும்,
கைதனிற் பழஞ்சோறும்,
சொந்தக் கால்களால் நடந்திடு நடையுமே
துணையெனக் கொண்டோராய்
இந்த நாட்டினில் ஏழைமா ணவர்பலர்
இருந்திடத் தினங்கண்டும்,
எந்தச் செல்வரும் இரங்கிடார்; அவர்தமக்
கிம்மியும் உதவாரே.

---

# நாட்டுப் பெருஞ்செல்வம் — 3.

(தொண்டன் கூறுவது)

1 " காட்டுக் குயிலிசை வெண்ணில வோடு
கலந்து கலிப்பதென "
பாட்டும், சிரிப்பும் படைத்த குழந்தைகள்
பக்கம் இருந்திடிலோ,
வாட்டம் சிறிதும் மனத்திடை இல்லை ; நம்
வாழ்வும் நலம்பெறுமே ;
நாட்டுப் பெருஞ்செல்வ மாவன என்றைக்கும்
நம்முடைப் பிள்ளைகளே.

2 " காற்றும் மழையும் விரவி உழவர்க்குக்
காட்சி அளித்ததென "
ஆற்றலும், அன்பும் அடைந்த குழந்தைகள்
அண்டை இருந்திடிலோ,
ஏற்ற மனத்தில் எழுந்த கவலைகள்
ஏக நலம்பெறுவோம் ;
சாற்று பெரும்பொரு ளாவன நன்னெறிச்
சாரும்நம் பிள்ளைகளே.

# இன்பக் கடல் — 4.

(தந்தை கூற்று)

மல்லிகைக் கொடியை மாலையில் பார்த்தேன் ;
நல்ல அரும்புகள் "பல்போ" லிருந்தன ;
சிறிதுநே ரத்திற் சிரித்தது போல
இதழ்கள் விரிந்தன ; எழின்மிகு காட்சி !
பச்சிலை நடுவே "பால்போல்" மலர்ந்த
மல்லிகை மலரின் மாண்பினைப் பார்த்தேன் ;
அடுத்த நொடியிலென் அழகமர் சிறுவன்
சிரித்த முகமும், சிறுமென் னடையும்,
அழகின் மேலே அழகினைச் செய்ய
கொஞ்சிய மொழியொடு குறுக வந்தனன் ;
மல்லிகைச் சிரிப்பொடு, மைந்தன் சிரிப்பும்,
கொஞ்சும் மொழியும் நெஞ்சம் புகுந்தன ;
அதனால்,
கண்ணுஞ் செவியும் களிப்பை யடைய
இன்பக் கடலில் இறங்கி நீந்தினேன் ;
அந்த நிலையில் அகல்வா னத்தில்
வெள்ளை மதியமுந் துள்ளி எழுந்துக்
கொள்ளை நிலாவைக் கொட்டி நின்றது ;
தென்றல் என்னுந் தீந்தமிழ்க் காற்று
மெல்லஎன் னுடம்பை மேவித் தொட்டது ;
அந்தஇன் பங்களில் அதிகம் என்ன
என்றன் குழந்தை என்னைத் தொட்டது ;
தொட்ட குழந்தையைத் தூக்கித் தழுவி
இன்பக் கடல்நடு ஏகிமூழ் கினனே.

# நான் காத்தேன் — 5.

(தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் மகிழ்ந்து கூறுவது)

1 பாலைமட்டும் நானூட்டி வளர்த்தேனோ?
என்சேய்க்குப், பாலின் மேலாம்
சீலமுள்ள என்மொழியைச் செவியூட்டி,
உவப்பூட்டிச், சிறந்த நெஞ்சுள்
காலவரை கடவாத செயலூட்டிக்,
கடமைதனைக் கரைத்தே யூட்டி,
ஞாலமதை உயர்வாக்கும் ஞானநெறி
தனையூட்டி, நான்காத் தேனே.

## குழந்தைக்குக் கூறும் இலக்கியம் — 2.

# துயிலெடை — 6.

(தாய் கூறுவது)

1 காக்கை எழுந்தது; காவென்று கரையுது;
காதின்கண் கேட்கலையா?
கோழியுங் கொக்கரக் கோவென்று கூவுது;
குவிந்தகண் திறக்கலையா?
பூக்கள் மலர்ந்தன; பொன்வண்டு பாடின:
பொலிவினைப் பார்க்கலையா?
காலையில் விழித்திடக், கடமையைப் புரிந்திடக்,
கற்றுக்கொள் என்குழந்தாய்!

2 உன்னுடை நாய்க்குட்டி உனக்குமுன் விழித்தெழுந்
தோடிக் குதிக்குதுபார்;
பொன்னிறச் சூரியன் றன்னொளி சன்னலில்
புகுந்து வருகுதுபார்;
சொன்னசொல் கேட்டிடுங் குழந்தையின் கூட்டங்கள்
சூழ்ந்தது தெருவினில்பார்;
சுறுக்கென எழுந்திடு, முகத்தினை அலம்பிடு,
சோம்பல் அகன்றிடுமே.

# காலைக் கடன் 7.

(தந்தை கூறுவது)

1 சின்னஞ் சிறுகுழந்தாய்! — அங்கே
சேவல் முழங்குதுபார்;
இன்னம் பெருந்துயிலோ? — இங்கே
ஏகிற்று வல்லிருளே.

2 கண்ணைத் துடைத்திடுவாய் — அதோ
காலைக் கதிரொளிபார்;
மண்ணைப்பொன் னாக்கிக்கொண்டே — ஒளி
மல்கி எழுகின்றதே.

3 வீட்டின் வெளிப்புறம்வா — அந்தப்
பாட்டை யிடஞ்செல்லுவோம்;
காட்டின் அழகைக்கண்டு — நட
காலில் பலம்வருமே.

4 ஆற்றுக்குச் சென்றிடுவோம் — அங்கே
ஆன மணல்வெளிபார்;
சாற்றும் மரங்களின்பூ — எங்கும்
சார்ந்து மணப்பதைப்பார்;

5 துள்ளிக் குதித்திடுவாய் — உன்றன்
உள்ளங் களிப்படையும்;
வெள்ளைக் குளிர்புனலில் — நாமும்
வீழ்ந்து முழுகிடுவோம்.

தெய்வத்தை நீயெண்ணிக்கொள் — உன்றன்
தீவினை தீர்வதற்கே ;
செய்வதெல் லாஞ்சிறக்கும் — நல்ல
சேதி யிதுவுனக்கே.

காலைக் கடன்முடித்தோம் — கொஞ்சம்
காலை உணவுகொள்வோம் ;
நூலைப் படித்திடுவோம் ; — என்றும்
நோயின்றி வாழ்ந்திடுவோம்.

---

# நல்ல தம்பி—8.

(ஆசிரியர் கூறுவது)

சுற்றித் திரியும்நல்ல தம்பீ ! நீயும்
சோம்பற் கிடங்கொடாதே தம்பீ !
கற்றுத் தெளியவேணுந் தம்பீ ! — கல்வி
கண்கள் உனக்குமிகத் தம்பீ !

தெய்வத்தைப் போற்றவேணுந் தம்பீ ! — நெஞ்சில்
தீங்கினை எண்ணிடாதே தம்பீ !
செய்வதை எண்ணிச்செய்யின் தம்பீ ! — அது
சிறந்து முடியுமடா தம்பீ !

அன்பை மனத்தில்வைத்தால் தம்பீ ! — அதில்
ஆர்வம் விளையுமடா தம்பீ !
இன்பம் விளையுமடா தம்பீ ! — இங்கு
எல்லாரும் நண்பரடா தம்பீ !

4 பொய்யுந் திருட்டும்வேண்டாம் தம்பீ ! — அவை
பொல்லாக் கொடுமைதரும் தம்பீ !
மெய்யும் ஒழுக்கமுமே தம்பீ ! — இந்த
மேதினிக்கு வேண்டுமடா தம்பீ !

5 இன்சொல் உனக்குவேண்டுந் தம்பீ ! — அதை
என்றும் மறந்திடாதே தம்பீ !
வன்சொல் உனக்குவேண்டாந் தம்பீ ! — அதை
வையகம் ஏற்றிடாது தம்பீ !

6 கோளினைக் கூறவேண்டாந் தம்பீ ! — அது
குற்றம் விளைத்துவிடும் தம்பீ !
தேளினைப் போன்றகடுஞ் சொல்லால் — நீயும்
திட்டுதல் நல்லதல்ல தம்பீ !

7 தேய்த்துக் குளிக்கவேணுந் தம்பீ ! — தினம்
தோய்த்த துணியைக்கட்டுத் தம்பீ !
ஏய்த்துப் பிழைத்திடாதே தம்பீ ! — அது
என்றைக்குந் தீங்குதரும் தம்பீ !

8 பசித்துப் புசிக்கவேணுந் தம்பீ ! சும்மா
பட்சணம் தின்றிடாதே தம்பீ !
இசித்து வயிற்றுநோயாம் தம்பீ ! — பின்னர்
ஏப்பமும் வாந்தியுமாந் தம்பீ !

9 கண்ட இடங்களெலாந் தம்பீ ! நீயும்
காறி உமிழ்ந்திடாதே தம்பீ !
மண்டலம் தூய்மையானல் தம்பீ ! — எங்கும்
மக்களுக்கு நோய் வராது தம்பீ !

# நமது பாடசாலைகள் — 9.

(கண்டோர் கூறுவது)

1 நந்தவ னத்திற்கு நான்போனேன் ;
நல்ல மலர்களை நான்பார்த்தேன் ;
அந்த மலர்களின் நன்மணமும்,
அழகுங், காணத் தருங்குணமே.

2 செடியில் ரோஜா மலர்ந்திருக்கு ;
[1] சினையில் கொன்றை பூத்திருக்கு ;
கொடியில் முல்லை சிரித்திருக்கு ;
குளத்தில் தாமரை விரிந்திருக்கு.

3 எங்கே பூக்கள் பூத்தாலும்
எல்லாம் ஒன்றும் மாலைக்குள் ;
எங்கே பாலர் தோன்றிடினும்,
எல்லாம் ஒன்றும் சாலைக்குள்.

4 "ஏட்டிற் சிறந்த பூவாலே
இயற்றப் பட்ட மாலைகள்போல்"
நாட்டிற் கழகை நல்கியிடும்
நமது பாட சாலைகளே.

---

[1] சினை — கிளை.

# பள்ளிக்கூடச் சிறுவர் — 10.

(ஆசிரியர் கூறுவது)

1 பள்ளிக் கூடச் சிறுவீரே!
படிக்கும் வகையை உணர்வீரே;
ஆசான் பாடம் சொல்லுங்கால்
அங்கே இங்கே பார்க்காதீர்

2 சொல்லுங் கருத்தைக் கேட்டிடுவீர்;
சுருக்க மாக எழுதிடுவீர்;
எல்லாம் விளங்க வில்லையெனில்
எழுந்து பணிவாய்க் கேட்டிடுவீர்

3 படித்தும் விளங்காப் பகுதிகளைப்
பலபேர் சேர்ந்து சிந்தியுங்கள்;
வடித்துக் கருத்தை மனத்தினிலே
வகையாய் வைக்கப் பயின்றிடுங்கள்.

4 ஒருவர்க் கொருவர் கேட்டிட்டு
உண்மை விடையை கூறிடுவீர்;
கூறிய படியே எழுதிடுவீர்;
கூறல், எழுதல், குணந்தருமே.

5 வகுப்பின் அறையுள் உட்கார்ந்து
வம்புந், தும்பும், பேசாதீர் ;
ஒழுங்கும், அறிவும், உதவுதற்கே
உரிய இடம் நம் வகுப்பறையே.

6 பள்ளித் தோழர் தங்களுடன்
பகையைச் சிறிதுங் கொள்ளாதீர் ;
தெள்ளத் தெளியக் கற்ருேர்க்குத்
தீய பகைவர் எங்குமிலே.

---

## கடமை யறிந்த நாய்க்குட்டி—11.

(தந்தை கூறுவது)

1 வெள்ளை வெள்ளை நாய்க்குட்டி
வீதியில் திரியும் நாய்க்குட்டி ;
கள்வன் வந்தால் குரைத்தோட்டி
காவல் புரியும் நாய்க்குட்டி.

2 வாலை யாட்டி மிகத்துள்ளி
வந்து குதிக்கும் நாய்க்குட்டி ;
காலின் கீழே படுத்திருக்குங்
கடமை அறிந்த நாய்க்குட்டி.

3 தம்பி யுடனே விளையாடும்;
தக்கவர் வந்தால் வரவேற்கும்;
நம்பி வாழும் நம்முடனே;
நாமுங் காத்தல் நற்கடனே

4 கல்லைக் கில்லை எறியாதே;
கைத்தடி கொண்டு நொறுக்காதே;
பல்லைக் காட்டிக் கெஞ்சுகின்ற
பக்குவ முள்ள நாய்க்குட்டீ.

---

## நாகரிகக் காகம்—12.

(அண்ணன் கூறுவது)

1 நல்ல நல்ல காகம் நாகரிகக் காகம்
சொல்லுகிறேன் பாப்பா! சுறுசுறுப்பாய்க் கேட்பாய்
காலையிலே விழிக்கும் கத்திக்கத்தி எழுப்பும்
மாலையிலே குளிக்கும் மஞ்சள்வெயில் காயும்
தீனிகளைக் கண்டால் தின்றிடுமே ஒன்றாய்
ஞானிகளைப் போலே நன்னிமித்தங் கூறும்.

---

# விசுவு என்னுங் குழந்தை — 13.

(தொண்டன் கூற்று)

1 குளத்துக் கரைஇ நாவல் மரம்
கொத்துக் கொத்தாய்ப் பழுத்தது ;
குடுகு டுண்ணுக் குழந்தைக் கூட்டம்
கும்பல் கும்பலாய் எழுந்தது.

2 குனிஞ்சி நிமிர்ந்து சுற்றிப் பார்த்துக்
குழந்தைக் கூட்டம் நின்றது ;
குரங்கு மச்சான் குலுக்கிக் குலுக்கிக்
கோடிப் பழத்தைத் தந்தது.

3 வேண மட்டுந் தின்ற கூட்டம்
வீட்டை நோக்கி நடந்தது ;
விசுவு என்னுங் குழந்தை மட்டும்
வேண்டும் பழத்தை எடுத்தது.

4 அம்மா ளுக்கும் அக்கா ளுக்கும்
அவற்றைக் கொடுத்துக் களித்தது ;
அப்பா ருக்குங் கொடுக்கச் சொல்லி
அறிவிப் பொன்றும் அளித்தது.

5 நாமே தின்று வாழ்ந்து விட்டால்
நாட்டிற் குப்பய னில்லையே ;
நமது பொருளை பிறர்க்குங் கொடுத்து
நலத்தைப் புரிதல் நன்மையே.

# மின்னுகின்ற மீன் — 14.

(அண்ணன் கூறுவது)

1 மினுக்கு மினுக்கு மீனைப் பார் ;
மின்னு கின்ற மீனைப்பார் ;
எனக்கும் உனக்கும் இன்பந் தரும்
இங்கே வந்து வானைப்பார்.

2 " நீலக் கடலில் வெள்ளை முத்து
நிலைத்து மிதத்தல் போலவே "
நீல வானில் மீன்க ளெல்லாம்
நிற்கும் அழகை நிமிர்ந்துபார்.

3 " கண்ணைச் சிமிட்டி மனத்தில் நினைத்த
கருத்தைக் குறிக்கும் நண்பர்போல் "
விண்ணை அழகு படுத்தி யெங்கும்
விளங்கி மின்னும் மீனைப்பார்.

4 இருட்டில் திரியும் திருட்டுப் பயல்கள்
எல்லாப் பொருளுங் கவருவார் ;
இருட்டில் விளங்கும் இந்த மீன்கள்
எங்கள் மனத்தைக் கவருமே.

5 மாலை மதியம் ஒளியை வீசில்
மங்கி நிற்கும் மீனெலாம் ;
காலைக் கதிர்தன் வெயிலை வீசில்
கரந்து போகும் அவைகளே.

6 "இச்சை யான [1] காலப் பொறியில்
இனிது காலம் அறிதல்போல்
உச்சி விளங்கும் மீனைப் பார்த்தும்
உரிய காலம் அறியலாம்.

---

குழந்தை கூறும் இலக்கியம் — 3.

## நல்ல தமிழ்நாடு — 15.

**(தமிழ் நாட்டுக் குழந்தைகள் கூறுவது)**

1 நல்லதமிழ் நாட்டினிலே
நாங்கள் உதித்தோம்;
நாட்டினுக்கு நன்மைசெய
நாங்கள் மதித்தோம்.

2 எல்லோர்க்கும் நன்மைகளை
நாங்கள் எண்ணுவோம்;
எவ்வெவர்க்கும் அவைகளையே
நாங்கள் பண்ணுவோம்.

3 செந்தமிழைச் செம்மையுடன்
நாங்கள் பயில்வோம்;
சீர்த்தியான மொழிகளையும்
நாங்கள் நவில்வோம்.

4 எந்தமிழில் கலைவளர
நாங்கள் உழைப்போம்;
இரவுபகல் அவைகளையே
நாங்கள் இழைப்போம்.

---

[1] காலப்பொறி — கடிகாரம்.

# வீட்டுத் தோழன் — 16.

(சிறுவன் கூறுவது)

1 பசுவே! பசுவே!! அன்பாயே
பசும்புல் தருவேன் தின்பாயே;
"அன்னை போலப்" பால்தருவாய்
அடிக்க உன்னை மனம்வருமோ?

2 இனிய பானம் நீயிலையேல்
எனக்குக் கிடைக்கும் வகையுண்டோ?
நீதான் இங்கே இல்லையெனில்
நெய்யுந் தயிரும் பெறுவேனோ?

3 உன்றன் மோரை உண்டிட்டால்
உடலுக் குறுதி தந்திடுமே.
குப்பைச் சாணம் கொட்டிடிலோ
கொழுத்து வளரும் பயிர்தானே.

4 வீட்டுத் தோழன் நீயன்றி
வேறே தோழன் யாருண்டு?
கன்றும் நீயும் வாழ்ந்திட்டால்
களிப்பை அடைவேன் நான்றானே.

# வெள்ளை நிறமானாலுங் கள்ளம் போகுமோ? — 17.

(பெரிய பாப்பா கூறுவது)

1 வெள்ளை வெள்ளை பூனைக் குட்டி
வீட்டைச் சுற்றும் பூனைக் குட்டி
அள்ளி வைச்ச சோற்றை விட்டு
அடுப்பின் மேலே ஏறிக் கிட்டு

(வேறு)

2 காச்சி வைச்சப் பாலையெலாம் மிச்சம்வைக்கலே;
கலந்து வைச்சக் காப்பியையும் பாக்கிவைக்கலே;
வெள்ளைநிற மானாலுங் கள்ளம் போகுமோ?
"வேப்பங் காயும் பேரிக்காய்போல்"
[மிகஇனிக்குமோ?

---

# மனத்தினைப்போலே — 18.

(வகுப்பறையுள் அடங்கிக் கிடந்த மாணவர் பரந்த விளையாடுமிடத்தை அடைந்தபொழுது விளையாட்டுக் குழுத்தலைவன் கூறுவது)

1 காச்சு மூச்சென்று கத்துங்கடா — நீங்கள்
கசமுச வென்றே பேசுங்கடா.
கீச்சுக் கீச்சென்று கத்துங்கடா — பச்சைக்
கிளியினைப் போலே ஓடுங்கடா

2 சடுகுடு வென்றே ஓடுங்கடா — நல்ல
சதுரினை வைத்தே ஆடுங்கடா.
மடமட வென்று பேசுங்கடா — உங்கள்
மனத்தினைப் போலே பாடுங்கடா.

---

# ஓடி விளையாடில் — 19.

(நகரத்திலே சிறிய வீட்டுள் அடைந்து கிடக்கும் படித்த சிறுபெண் கூறுவது)

1 ஓடி விளையாடில் — என்றன்
உள்ளங் களிப்படையும் — அம்மா!
கூடி விளையாடில் — எனக்குக்
கோடி விருப்பம்வரும்.

2 ஓடி விளையாட — இங்கே
ஒருசாண் இடமுமில்லை.
கூடி விளையாட — சிறு
குழந்தையும் இல்லையம்மா.

3 வீட்டிற் சிறைகிடந்து — நெஞ்சின்
வேட்கை அழிந்தேனே — நல்ல
நாட்டின் நிலையறியேன். — "கிணற்றுள்
தண்ணுந் தவளையைப்போல்"

4 காலைப் பொழுதினிலே — வீட்டுக்
காரியம் பார்த்திடினும் — இந்த
மாலைப் பொழுதிலேனும் — இயற்கை
மாண்பினைப் பார்க்கவிடு.

---

## குண்டு நிலா — 20.

(குழந்தைக் கூட்டம் கூறுவது)

1 வெள்ளை நிலா வந்தது;
வெளிச்சம் போட்டு நின்றது;
கள்ளமிலாக் குழந்தைக் கூட்டம்
கையை நீட்டி அழைச்சது.

2 குண்டு குண்டு நிலாவே!
கூட வந்து குலாவே;
கண்டு கண்டு மதிப்போம்;
கையைத் தட்டிக் குதிப்போம்.

3 "பந்தைப் போல" நினைச்சிடோம்;
பார்த்துக் கையால் அடிச்சிடோம்;
எந்தத் தீங்கும் எண்ணிடோம்;
எதிர்த்து உன்னை வைதிடோம்

4 எந்தத் தெருவில் ஆடினாய்?
இந்த அழுக்கைக் கூடினாய்?
சொந்த மாக எண்ணுவோம்;
சோப்புப் போட்டுக் கழுவுவோம்.

5 அம்மா உனக்கு இல்லையா?
அழுக்கைப் போக்க வில்லையா?
சும்மா எங்கே திரியுறே?
சோறு எங்கே உண்கிறே?

6 வெள்ளைக் காரத் துரையைப்போலே
வெண்ணெய் ரொட்டி தின்னியா?
கொள்ளைப் பாலைக் குடிச்சிவிட்டுக்
குண்டு போல நின்னியா?

7 குதிச்சுக் கிதிச்சு ஓடியாடு
குண்டு டம்பு கரையுமே;
"கதிச்சுப் பெருத்த ஆமைப்போலக்"
கவலை கொண்டு நகர்கிறாய்.

---

## இளைச்சுப்போன நிலா — 21.

(குழந்தைக்கூட்டம் கூறுவது)

1 மாலைக் காலம் வந்தது;
மஞ்சள் வெயிலைத் தந்தது;
பாலை உண்ணக் கண்ணுக்குட்டி
பசுவ ராமல் நொந்தது.

2 சின்ன பிறை தெரிஞ்சது;
சிவப்பு வானம் எரிஞ்சது;
"மின்னு கின்ற விளக்கைப்போல"
மேலே மீனும் பொரிஞ்சது.

3 குழந்தைக் கூட்டங் கூடிற்று;
குதித்துக் குதித்து ஆடிற்று;
"இழந்து கண்ட பொருளைப்போலே"
இளைய பிறையை நாடிற்று.

4 இளைச்சுப் போன நிலாவே!
இங்கே வந்து குலாவே;
அழைச்சுச் சோறு போடுவோம்;
அக்க ரையாய் நாடுவோம்.

5 மேகம் உன்றன் போர்வையா?
மீன்கள் உன்றன் கோர்வையா?
தேக மெல்லாங் கருத்துப்போச்சுத்
தினமுந் திரிதல் நேர்மையா?

6 எங்கள் வீட்டில் தங்கிடு;
எட்டு நாட்கள் ஓய்வெடு;
தங்கச் சம்பாத் தயிருச்சோறு
தக்க வலுவைக் கொடுத்திடும்.

---

# எங்கள் வீட்டுத் தாமரை — 22.

(பெரிய தம்பி கூறுவது)

1 காக்கா எழுந்து கத்திச்சுக்,
கண்ணை விழிச்சுப் படுத்திருந்தேன் ;
கோழீ வந்து கூப்பிட்டதும்
குதிச்சு நானும் எழுந்தூடடேன்.

2 சிட்டுக் குருவி விடியலிலே
சேர்ந்து மாறிப் பாடிச்சு ;
"பட்டுப் போலே" செவ்வானம்
பரவி அழகாய் நின்றதுவே

3 "பொன்னை யுருக்கி நீராக்கிப்
பூமியி லெங்கும் பொழிவதைப்போல்"
என்னை மயக்கிச் சூரியனும்
எங்கும் தங்கத் தொளிசெய்தான்.

4 செடியுங் கொடியும் மலர்ந்தனவே ;
சிறுசிறு வண்டுகள் எழுந்தனவே ;
நொடியில் தேனை உண்டனவே ;
நோக்கிப் பாடி ஆடினவே.

5 தங்கப் பாப்பா எழுந்திருச்சுத்
தலைநீட். டிச்சுச் சூரியன்முன்
எங்கள் வீட்டுத் தாமரையும்
எதிர்கொள் வதுபோல் தோன்றிற்றே.

6 காலை அழகை என்சொல்வேன் !
கண்டார்க் க்ன்றே அதுதெரியும் ;
சேலை போர்த்திக் குறட்டையிடுஞ்
சிறுவர்க் கதுதான் தெரியாதே.